
தூய ஆரோக்கிய அன்னை திருவிழா
நவநாள் – 04
செப்டம்பர் 03, 2023
அருள் நிறைந்தவளே!
மீட்பின் ஊற்றே!

# அருள் நிறைந்தவளே! மீட்பின் ஊற்றே!

## அன்பில் இணைவோம்

அருட்பணி: ஆண்டவருடைய மீட்பை அறிவியுங்கள்
அவருடைய அரும்பெரும்செயல்களை எடுத்தியம்புங்கள்
Priest: Announce the salvation of the Lord
Proclaim his works among the people

மக்கள்: என்றென்றும் உள்ளது அவரது இரக்கம்
People: His mercy is everlasting

அருட்பணி: இறைவார்த்தையால் இவ்வுலகை ஒளிர்வித்த
இறைவனை நாம் வாழ்த்துவோம்.
Priest: Bless the Lord our God
Who sent the Word of life into the World

மக்கள் ஆண்டவர் தம் செயல்களில் நீதியுள்ளவர்
அவருடைய செயல்கள் புனிதமானவை
அணைத்துலகே ஆண்டவரைப் புகழ்வாயாக
உயிருள்ள அணைத்தும் அவரின் திருநாமத்தை வாழ்த்துவதாக

People: Just is the Lord in all His ways And Holy in all His works
Let every creature praise Him and all living beings bless his name

## அன்னையை புகழ்ந்து பாடுவோம்.

அன்னைக்குக் கரம் குவிப்போம்
அவள் அன்பைப் பாடிடுவோம்.

கன்னிமையில் இறைவன் உருக்கொடுத்தார்-அந்த
முன்னவனின் அன்னையென திகழ்ந்தார் -2
மனுக்குலம் வாழ்ந்திட பாதை படைத்தாள்
தினம் அவள் புகழினைப் பாடிடுவோம்.

பாவமதால் மனிதன் அருளிழந்தான்
பாசமதால் அன்னை கருணைகொண்டாள்-2
பாரினில் வாடினோர் வாழ்வு கண்டார் -2
பாரினில் அவள் புகழ் பாடிடுவோம்.

## மன்றாடுவோமாக

எல்லாம் வல்ல புனிதத் தந்தையே!
தூய கன்னி மரியா வழியாக எங்களுக்கு மீட்பின் ஊற்றாகிய
உம் திருமகன் கிறிஸ்துவை வழங்கினீரே!
அவருடைய நினைவுநாளைக் கொண்டாடும் நாங்கள்
வாழ்வின் நீறூற்றிலிருந்து முகந்து கொண்டு
தூய ஆவியின் நற்கொடைகளை அறுவடை செய்வோமாக.
உம்மோடு தூய ஆவியாரின் ...

**முன்மொழி:** அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!
ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!

## திருப்பாடலில் செபிப்போம்

### திருப்பாடல் - 31

1 ஆண்டவரே உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்:
நான் ஒருபோதும் வெட்கமடைய விடாதேயும்:
உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும்:
2 உம் செவிகளை என் பக்கம் திருப்பியருளும்:
விரைவில் என்னை மீட்டருளும்:
எனக்கு அடைக்கலம் தரும் கற்பாறையாய் இரும்:
என்னைப் பாதுகாக்கும் வலிமை மிகு கோட்டையாய் இரும்.

அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!
ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!

3 ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே,
உமது பெயரின் பொருட்டு எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்.
4 அவர்கள் எனக்கென விரித்து வைத்துள்ள வலையிலிருந்து
என்னை விடுவித்தருளும்: ஏனெனில், நீரே எனக்கு அடைக்கலம்.
5 உமது கையில் என் உயிரை ஒப்படைகின்றேன்:
வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளுனீர்.

அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!
ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!

6 நானோ, பயனற்ற சிலைகளில் பற்றுடையோரை வெறுத்து,
ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கிறேன்.
7 உமது பேரன்பில் நான் களிகூர்வேன்: அக்களிப்பேன்:
என் துன்பத்தை நீர் பார்த்திருக்கின்றீர் என் இக்கட்டுகளையும்
நீர் அறிந்துள்ளீர். 8 எதிரியின் கையில் என்னை நீர் விட்டுவிடவில்லை:
அகன்ற இடத்தில் காலூன்றி நீர் வைத்தீர்.

அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!
ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!

9 ஆண்டவரே, எனக்கு இரங்கும்: ஏனெனில்
நான் இக்கட்டான நிலையில் உள்ளேன்:
துயரத்தால் என் கண்ணும் என் உயிரும் என் உடலும் தளர்ந்து போயின.

அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!
ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!

10 வாழ்க்கை வருத்தத்திலேயே கடந்து செல்கின்றது
ஆம், என் வாழ்நாள் புலம்புவதிலேயே கழிகின்றது:
துயரத்தால் என் வலிமை குறைந்து போகின்றது:
என் எலும்புகள் தளர்ந்து போகின்றன.
11 என் பகைவர் அனைவரின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்:
என்னை அடுத்திருப்போரின் பேரிழிவுக்கு ஆளானேன்:
என் நண்பர்களுக்குப் பேரச்சம் வருவித்தேன்

என்னைத் தெருவில் பார்ப்போர் என்னிடமிருந்து விலகி ஓடுகின்றனர்.
[12]இறந்தோர் போல் நினைவினின்று நான் அகற்றப்பட்டேன்:
உடைந்துபோன மட்கலம் போல் ஆனேன்.

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[13]பலர் என்மீது பழிசுமத்தியது என் காதில் விழுந்தது:
எப்பக்கமும் பேரச்சம் சூழ்ந்தது. அவர்கள் ஒன்றுகூடி
எனக்கெதிராய்ச் சூழ்ச்சி செய்தார்கள்
என் உயிரை பறிக்கத் திட்டம் தீட்டினார்கள்.
[14]ஆண்டவரே, நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்:
நீரே என் கடவுள் ' என்று சொன்னேன்.

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[15]என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது:
என்னை துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும்.
[16]உமது முகத்தின் ஒளி அடியேன் மீது வீசும்படி செய்யும்:
உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்.
[17]ஆண்டவரே, உம்மை நோக்கி மன்றாடினேன்:
என்னை வெட்கமுற விடாதேயும்: பொல்லார் வெட்கிப்போவார்களாக!
பாதாளத்தில் வாயடைத்துப் போவார்களாக!

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[18]பொய் சொல்லும் வாய் அடைப்பட்டுப் போவதாக!
செருக்கும் பழிப்புரையும் கொண்டு,
நேர்மையாளருக்கு எதிராக இறுமாப்புடன் பேசும் நா கட்டுண்டு கிடப்பதாக!
[19]உமக்கு அஞ்சி நடப்போர்க்கு
நீர் வைத்திருக்கும் நன்மை எத்துணைப் பெரிது!
உம்மிடம் அடைக்கலம் புகுவோர்க்கு மானிடர் முன்னிலையில்
நீர் செய்யும் நன்மை எத்துணை மிகுதி!

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[20]மனிதரின் சூழ்ச்சியினின்று அவர்களைக் காப்பாற்றி
உமது முன்னிலையின் மறைப்பினுள் வைத்துள்ளீர்!
நாவுகள் கிளப்பும் பூசலினின்று அவர்களைப் பாதுகாத்து
உமது கூடாரத்தினுள் வைத்துக் காக்கின்றீர்!

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[21]ஆண்டவர் போற்றி! போற்றி! ஏனெனில்,
முற்றுகையிடப்பட்ட நகரினில், அவர்தம் பேரன்பை
வியத்தகு முறையில் எனக்கு விளங்கச் செய்தார்.
[22]நானோ, கலக்கமுற்ற நிலையில்
உமது பார்வையினின்று விலக்கப்பட்டேன் என்று சொல்லிக் கொண்டேன்:

ஆனால், நான் உம்மிடம் உதவிக்காக வேண்டினபோது
நீர் என் கெஞ்சும் குரலுக்கு செவிசாய்த்தீர்.

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

[23]ஆண்டவரின் அடியார்களே, அவரிடம் அன்பு கொள்ளுங்கள்:
ஆண்டவர் பற்றுறுதியுடையோரைப் பாதுகாக்கின்றார்:
ஆனால், இறுமாப்புடன் நடப்போர்க்கு
அவர் முழுமையாய்ப் பதிலடி கொடுக்கின்றார்.
[24]ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே,
நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள்.

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

பிதாவுக்கும் சுதனுக்கும் தூய ஆவிக்கும் மகிமை உண்டாகுக
ஆதியிலிருந்தது போல இப்பொழுதும் என்றென்றும் மகிமை உண்டாகுக

**முன்மொழி: அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றலால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

## இறைவார்த்தைக்கு செவிமடுப்போம்

தூய யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்

19:25-30

[25]சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின்
மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். [26]இயேசு தம்
தாயையும் அருகில் நின்ற தம் அன்புச் சீடரையும் கண்டு தம் தாயிடம்,
அம்மா, இவரே உம் மகன் என்றார். [27]பின்னர் தம் சீடரிடம், 'இவரே உம் தாய்'
என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவ அளித்து
வந்தார். [28]இதன்பின், அனைத்தும் நிறைவேறிவிட்டது என்பதை
அறிந்த இயேசு, 'தாகமாய் இருக்கிறது' என்றார். மறைநூலில் எழுதியுள்ளது
நிறைவேறவே இவ்வாறு சொன்னார். [29]அங்கே ஒரு பாத்திரம் நிறையப்புளித்த
திராட்சை இரசம் இருந்தது. அதில் கடற்பஞ்சை நன்கு தோய்த்து ஈசோப்புத் தண்டில்
பொருத்தி அதை அவர்கள் அவரது வாயில் வைத்தார்கள். [30]அந்த இரசத்தைக்
குடித்ததும் இயேசு, எல்லாம் நிறைவேறிற்று' என்று கூறித் தலை சாய்த்து ஆவியை
ஒப்படைத்தார்.

**இது கிறிஸ்துவின் வாழ்வு தரும் நற்செய்தி**
**கிறிஸ்துவே உமக்குப் புகழ்..**

### Gospel Reading Jn:19:25-30

[25]And that is what the soldiers did.
Meanwhile, standing near the cross of Jesus were his mother, and his mother's sister, Mary the wife of Clopas, and Mary Magdalene. [26]When Jesus saw his mother and the disciple whom he loved standing beside her, he said to his mother, "Woman, here is your son." [27]Then he said to the disciple, "Here is your mother." And from that hour the disciple took her into his own home. [28]After this, when Jesus knew that all was now finished, he said

(in order to fulfill the scripture), "I am thirsty." [29]A jar full of sour wine was standing there. So they put a sponge full of the wine on a branch of hyssop and held it to his mouth. [30]When Jesus had received the wine, he said, "It is finished." Then he bowed his head and gave up his spirit.

**இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்தி சிந்திப்போம்...** (Reflection)

## இறைமக்களின் மன்றாட்டு

**அருட்பணி: ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பியதால் பேறுபெற்ற தாயே! எங்கள் ஆரோக்கிய அன்னையே! உம்மைப்போல இறைதிட்டத்துக்கு நாங்களும் ஒத்துழைக்க உம்மிடம் எங்கள் வேண்டுதல்களை சமர்ப்பிக்கின்றோம்.**

1. அன்னையாம் திருச்சபைக்காக மன்றாடுவோம்: தாய் திருச்சபையை வழிநடத்தும் நமது திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள் குருக்கள் மற்றும் இறைமக்கள் நமது அன்னை மரியாவைப் போல ஆவியின் வரங்களால் நிரப்பட்டு எல்லோரையும் மகிழ்விக்கும் நற்செய்தியின் கருவிகளாகத் திகழ்ந்திட ...

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

2. நமது தளத்திருச்சபைக்காக மன்றாடுவோம். நமது தலைமை ஆயர் மற்றும் இனையாயர்கள் நமது உயர் மறைமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிலும் இறைவார்த்தையின் ஒளி மகிழ்சியிலும் மனநிறைவிலும் நாளுக்கு நாள் வாழ்ந்திட வளர்ந்திட...

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

3. அமெரிக்கா வாழ் இந்தியர்களுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காக மன்றாடுவோம். அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றுபட்டு வாழ்ந்து உலகிற்கு ஒளியாய்த் திகழ்ந்திட...

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

4. புனித ஆரோக்கிய அன்னையின் பத்தர்களுக்காக மன்றாடுவோம்: அன்னையைப் போல பிறரன்பிலும் இறையன்பிலும் நாளுக்கு நாள் வாழ்ந்து வளர்ந்திடவும் நற்செய்திக்குச் சான்றுபகர்ந்திடவும் அருள்வேண்டி..

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

5. உலக அமைதிக்காகவும், குறிப்பாக இந்தியாவில் குறிப்பாக மனிப்பூரில் அமைதி திரும்பவும், இயற்கை அழிவினால் பாதிக்கப்பட்ட மக்கள் மறுவாழ்வு பெறவும்...

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

6. நமது குடும்பங்களை அன்னையிடம் ஒப்படைப்போம். ஒவ்வொரு குடும்பங்களின் தேவைகள். அன்பு, அமைதி, குடும்ப ஒற்றுமை, இன்னும் பல்வேறு தேவைகளையும் குறிப்பாக விசா தேவைகள் அனைத்தையும் அன்னையிடம் ஒப்படைப்போம், இவற்றிலிருந்து மீண்டுடெழுந்து நாங்கள் அன்றாட ஆன்மீக வாழ்வில் வளரவும், எங்கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வில் நம்பிக்கை ஒளியில்

வெற்றிநடைபோடவும்…

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

6. நமது தனிப்பட்ட தேவைகளுக்காக ….

**அருளின் ஊற்றே! ஆண்டவரின் தாயே! அடியவர் எமக்காய் உம் மகனிடம் மன்றாடும் தாயே!**

# புனித ஆரோக்கிய அன்னை நவநாள் செபம்

மகா பரிசுத்த கன்னிகையே! இயேசுவின் தாயாராயிருக்குமாறு
பரிசுத்த மூவொரு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட தூய கன்னி மரியே!
கடவுளுடைய திருப்புதல்வர் உமது திருஉதரத்தில்
மனிதராக அவதரித்தபோதும் ஒன்பது மாதமளவாக
அவரை உமது மாசணுகாத கருவில் தாங்கியபோதும்
நீர் அடைந்த பேரின்பத்தை உமது ஊழியர்களாகிய நாங்கள்
நினைவுகூர அருள்கூர்ந்தமைக்கு உமக்கு நன்றிகூருகின்றோம்.
எமது அன்பினாலும் தூய வாழ்வினாலும்
நீர் அடைந்த பேரின்பத்தை நாங்களும் அடைய
எங்களுக்காக மன்றாடும் தாயே!
துன்பப்படுவோரின் தாயே இரக்கமிக்க அன்னையே!
நீர் அனுபவித்த பேரின்பத்தைக் கொண்டாடுகின்றவர்களுக்கு
நீர் வாக்களித்துள்ள விசேச உதவியையும் பாதுகாப்பையும்
எங்களுக்கு இவ்வேளையில் பெற்றுத்தந்தருளும்.
கேளுங்கள் கொடுக்கப்படும் என்ற உம் திருமகன் இயேசுகிறிஸ்துவின்
வல்லமைமிக்க வார்த்தையில் நம்பிக்கைகொண்டு
உமது வல்லமைமிக்க மன்றாட்டுகளில் நம்பிக்கைகொண்டு
இந்த நவநாட்களில் நாங்கள் செய்யும் விண்ணப்பங்களை
கடவுளுடைய திருவுளத்திற்கு மாறாயிருந்தால்
எமக்கு எவ்வரம் மிகவும் தேவையோ அவற்றை பெற்றுத்தந்தருளும்.

**(இங்கு மன்றாட்டுக்களை நினைவிற்கொள்ளவும்)**

இறைவனின் தாயே! இப்பொழுது உமக்கு வணக்கமாக
நாங்கள் செய்யும் இந்த நவநாளை உம்மில்கொண்டிருக்கும்
ஆழ்ந்த நம்பிக்கையின்பொருட்டு செய்கிறோம்.
இயேசு மனிதராக அவதரித்தபோது
உமது திருவுளம் அடைந்த தெய்வீக மகிழ்ச்சியை
அதற்கு வணக்கமாக நாங்கள் செய்யும் இந்நவநாள் பக்தி முயற்சியையும்
இப்பொழுது நாங்கள் சொல்லப்போகும்
அருள் நிறைந்த செபத்தையும் அன்போடு ஏற்றுக்கொள்ளும் தாயே!

**(௯ முறை அருள் நிறைந்த செபம்)**

நீர் அணிந்திருக்கும் மணிமுடியில்
எம் செபங்கள் அத்தனையும் விண்மீண்களென துலங்குமென
ஆழ்ந்த நம்பிக்கைகொள்கின்றென்.
வருந்துவோருக்கு ஆறுதலே!
எம் வேளைநகர் ஆரோக்கியத் தாயே!
நாங்கள் உம்மிடம் மன்றாடும் விண்ணப்பங்கள் நிறைவேறுமாறு
உமக்கு வணக்கமாக இதுவரை புனிதர்களால் செய்யப்பட்ட

எல்லா அரும்பெரும் நிகழ்வுகளையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.
உமது திருமகனும் எங்கள் ஆண்டவருமான
இயேசு கிறிஸ்துவின் திருஇருதயத்தில் பொங்கி வழியும் பேரன்பையும்
அதுபோன்ற உமது அன்பையும் நினைவிற்கொண்டு
உமது அடியோர்களாகிய எங்களது செபத்தை ஏற்று
எம் மன்றாட்டுகளை அடைந்து தந்தருளும் அம்மா. ஆமென்.

## அருள் நிறைந்த நம் ஆரோக்கிய அன்னைக்கு அஞ்சலி

ஆரோக்கிய மாதாவே-உமது
புகழ்பாடித் துதித்திடுவோம்
எந்நாளும் பாடித்துதித்திடுவோம்.

அலைகள் மோதிடும் கடற்கரை தன்னில்
வசித்திட ஆசை வைத்தாயே
பலவகை கலைகளும் பாரினில் துலங்கிட
அணைவர்க்கும் துணை புரிந்தாயே-2

தேன்கமழும் சோலை சூழ்ந்து விளங்கும்
வேளாங்கண்ணியில் அமர்ந்தாயே
வானகமும் இந்த வையகமும்
செழித்தோங்கிட அருள் புரிந்தாயே-2

## மன்றாடுவோமாக

ஆண்டவரே! தூயவரான தந்தையே!
மீட்பின் ஊற்றாம் கிறிஸ்துவின் தாயாகிய மரியாவால்
உமது வல்லமையை காண்பித்து அவர் வழியாக
இன்றும் நாங்கள் எங்கள் மீட்பின் நிறைவைக் கண்டடையச் செய்கின்றீர்.
உமது அளவற்ற ஞானத்தாலும் அன்பாலும்
திருச்சபை என்றும் உமது இல்லத்தில்
தாய்மைக்குரிய பன்பை நிறைவடையச் செய்து
உமது அருளின் பகிர்வினை எங்களுக்கு அளிக்கின்றார்.
அவரின் வார்த்தையால் எங்களுக்கு கற்பிக்கின்றீர்
அவரின் முன்மாதிரிகையால் உம் திருமகனை
பின்பற்ற செய்கின்றீர் அவரின் செபத்தால் எங்களை மன்னிக்கின்றீர்.
நாங்களும் அன்னையைப்போல அருள்வாழ்வில் நிலைத்துநிற்க அருள்தாரும்.
எங்கள் ஆண்டவராகிய ...

## இறையாசீர்

**அன்னையே எங்கள் அரசியே! அருளின் ஊற்றே!**
**ஆவியானவரின் ஆற்றளால் அனைத்துகின் மான்பைக் காத்த மாதரசியே!**

Velankanni Community of Southern California
Divine Saviour Catholic Church
610 Cypress Ave, Los Angeles CA 90065